**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.292/2023**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | சதீஸ்(PW3) | | |
| Father's Name | சந்திரசேகரன் | தொழில் | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 38 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th **day of July 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Absent, Petition filed and allowed)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.07.2023 தேதி காலை 7:00 மணி இருக்கும். நான் லூர்துபுறம் பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது போலீசார் இருந்தார்கள்.அந்த இடத்தில் முந்தைய நாள் நடந்த வாகன விபத்து சம்பந்தமாக அந்த இடத்தை பார்த்து படம் வரைந்து எழுதினார்கள். அதற்கு சாட்சியாக நானும் என் உறவினர் ஈஸ்வர மூர்த்தியும் கையொப்பங்கள் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

விபத்து சம்பந்தமாக நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன பிரபாகரன் எனக்கு உறவினரா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் சுமார் 10 நபர்கள் இருந்திருப்பார்கள். என்னுடன் சாட்சி கையொப்பமிட்ட ஈஸ்வரமூர்த்தி எனக்கு தெரியும். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |